விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24

ஒலி 170 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 24 புதன்கிழமை (07.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.14.4,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## யாழ்ப்பாணத்தில் படையினர் வசமிருக்கும்


# காணிகளை விடுவிப்பது தொடர்பில் கொழும்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் படையினர் வசமிருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில் ஜனாதிபதியின் செயற்குழுப் பிரதானி சாகல ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.**

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற இக்கலந்துரையாடலில், காணிகளை விடுவிப்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளக்கூடிய குழு ஒன்றினை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

11



கோப்புப் படம்

## கஜேந்திரகுமார் மீது தாக்குதல்

### மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸாரிடம் இன்று வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணியில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு இன்றைய தினம்

11

## கஜேந்திரகுமாருக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

### சிங்கள ராவய அமைப்பு சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு

11

# கஜேந்திரகுமார் எம்.பி வெளிநாடு செல்லத்தடை

## கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவு

(கிளிநொச்சி)

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தற்காலிகமாக வெளிநாடு செல்ல தடைவிதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தொடர்பிலான வழக்கு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஜெமில் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கில் பொலிஸ் நிலையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வாக்கு மூலம் வழங்காத நிலையில் அவ

11



# இலங்கையை கட்டியெழுப்ப சர்வதேச ஆதரவு தாருங்கள்

### அமெரிக்க பிரதிநிதியிடம் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

இலங்கையை கட்டியெழுப்புவதற்கான சர்வதேச ஆதரவைத் தாருங்கள்

11



## வரணியில் விபத்து

### வற்றாப்பளை சென்று திரும்பிய இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வரணி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரொருவர் மின்கம்பத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு வற்றாப்பளை

11



## எரிபொருள் விலைகளை மறுசீரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருள் விநியோகத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சர்வதேச எரிபொருள்நிறுவனமான சினோபெக்கின் வணிக நடவடிக்கைகளை தொடர்ந்து எரிபொருள் விலைகள் மறுசீரமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக எரிபொருளுக்கான நிலையான ஆகக் குறைந்த மற்றும் ஆகக்கூடிய விலையை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்று அரசாங்கத் தகவல் தரப்புகள் தெரிவிக்கின்றன.

11

# பெறுமதிசேர் வரிச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள தீர்மானம்

(கொழும்பு)

பெறுமதிசேர் வரி விடுவித்தலின் அடிப்படை விதிமுறை மற்றும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர்வரி முறைமையை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியளிப்பு வேலைத்திட்டத்துக்கமைய, பெறுமதிசேர் வரி பற்றிய முக்கிய இரண்டு மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

அதன்கீழ், அதிகளவு விடுவித்தலை நீக்கி, பெறுமதிசேர் வரி முறைமையை மறுசீரமைப்புச் செய்தல், இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமை நீக்கப்பட வேண்டியுள்ளது.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

## வேலையாட்கள் தேவை

பகுதிநேர வேலையாட்கள் தேவை (ஆண்/ பெண்) சம்பளம் மணித்தியால அடிப்படையில் வழங்கப்படும். (15872)

**077 713 0839**


யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் - 5 இன் (NCT -Level 5) I,II,III ஆம் எழுத்துப் பரீட்சை - 2022 டிசெம்பர் - 2023 -யூலைக்கான பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. எனவே பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்ப படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 19.06.2023 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ம)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி

**சிவயோகம் செல்வராசா**

(இளைப்பாறிய ஆசிரியை –
கொக்குவில் இந்துக் கல்லூரி,
இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை)

பிறப்பு 31.10.1928 இறப்பு 07.06.2012

திதி 07.06.2023 சதுர்த்தி


அம்மா என்று அழைக்காத உயிர் இல்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே!
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
மருமகன் (பேராசிரியர் மா.சின்னத்தம்பி)

"சுபசதனம்"
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு
கொக்குவில். (15861)

## மரண அறிவித்தல்

பிறப்பு 1949 . 01 . 15



இறப்பு 2023 . 06 . 06

## தம்பையா சிவலிங்கம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவலிங்கம் அவர்கள் 06.06.2023 நேற்று செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் ஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகமணி - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவகாந்தன், காந்தீபன், பாலகௌரி, தயாபரன், சிவாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷாந்தி, பிரதீபா, கௌசலா, திவ்யா, செல்வந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனரும் கீர்த்தனா, அர்ஜனா, லக்ஷனா, தர்சிகன், பவிஷனா, மகஸ்வின், அபெஹ்ஷா, கவினயா, பிரார்த்தனா, மோனிஷா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.06.2023 வியாழக்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (15867)

தகவல்:-
குடும்பத்தினர்
075 719 4287, 076 707 3245

## ஜேர்மனியில் உள்ள பிரபல சர்வதேச சட்ட நிறுவனத்தின் கிளைகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும்...





ஜேர்மனியின் சர்வதேச சட்ட நிறுவனத்தை யாழ் நகரில் திறந்து வைத்து தங்களுடைய இலவச சட்ட சேவையை ஆரம்பித்துள்ளனர். அதிலே கடந்த 1985 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை ஜேர்மனியில் குடிவரவு குடியகல்வு சட்ட நிறுவனம் கடந்த வருடம் கொழும்பிலும் இந்த வருடம் யாழ்ப்பாணத்திலும் தமது சேவையை விஸ்தரித்துள்ளனர்.

இச் சட்ட நிறுவனத்தினால் இரண்டு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக புகலிட கோரிக்கைக்கு விண்ணப்பித்தவர்களில் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு நிர்வாக நீதிமன்றத்தில் ஆவணங்களையும், ஆதாரங்களையும் சமர்ப்பித்து நிரந்தர வசிப்புரிமையையும் அதன்பின் குடியுரிமையையும் பெற்றுக்கொடுத்துள்ளனர்.

சர்வதேசம் முழுவதிலும் இலங்கைத் தமிழர்கள் குறிப்பாக புகலிட கோரிக்கையாளர்கள் அந்தக் காலத்தில் பண வசதி இல்லாமல் மற்றும் அகதி அந்தஸ்து கோரி நின்றவர்களின் வழக்குகளை பரிசீலித்து அவர்களுடைய நிதி நிலைமை காரணமாக இலவச சேவையை வழங்கி குடியுரிமை பெற்றுக் கொடுத்த சட்ட நிறுவனமாகும். தொடர்ந்தும் ஜேர்மனியில் புகலிடக் கோரிக்கையைக் கேட்டு வருபவர்களுக்கு தவறான வழியில் தமது பயணத்தை மேற்கொள்வது மாத்திரமன்றி புகலிடக் கோரிக்கைக்குரிய சரியான காரணங்களையும், ஆதாரங்களையும் சமர்ப்பிக்காமல் சூழ்நிலை காரணமாக இன்றும் பல இளைஞர்கள், யுவதிகள் ஜேர்மனியில் இருந்து நாடு கடத்தப்படுவதற்காக குடியகல்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு சிறையிலும் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அவர்களின் நன்மை கருதியும், அவர்களுடைய குடும்பத்தாருடைய நன்மை கருதியும் இந்த சட்ட நிறுவனம் விரைந்து செயற்படுவதற்காக இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு இலவச ஆலோசனை வழங்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியின் சர்வதேச சட்ட நிறுவனத்தின் தலைவர் திரு. ஜோர்ச் கோரென்புளோ 2023ஆம் ஆண்டு வைகாசி மாதம் 6ஆம் திகதி சட்ட நிறுவனத்தை திறந்து வைத்து அவர் பேசும் போது இந்த நாட்டில் பிறந்து 1984 ஆம் ஆண்டு ஜேர்மனிக்கு வந்து ஒரு சட்ட மாணவனாக கல்வி பயின்று சிறந்த தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும், சிறந்த அரசியல் திறனாய்வாளராகவும், சிறந்த சட்டத்தரணியாகவும் இரண்டு இலட்சம் வழக்குகளை பரிசீலித்து இன்று தன்னுடைய நாட்டின் அதன் கிளை நிறுவனத்தைத் திறப்பதற்கு எங்களிடம் வேண்டுகோள் விடுத்து தென்கிழக்கு ஆசியாவிற்கான கிளை நிறுவனத்தை கொழும்பிலும், வடக்கு மாகாணத்திற்கான கிளை நிறுவனத்தை யாழ்ப்பாணத்திலும் திறந்து வைப்பதில் தாம் பெருமையடைவது மட்டுமல்ல உலகிலே குடிவரவு குடியகல்வு சட்ட நிறுவனங்களில் நிராகரிக்கப்பட்ட இரண்டு இலட்சம் வழக்குகளை வென்றெடுத்து புகலிடக் கோரிக்கையாளர்களை நிரந்தர குடியுரிமையாக்கிய திரு.MTS **இராமச்சந்திரன்** ஒரு சாதாரண சட்டத்தரணி அல்ல அவர் ஒரு நட்சத்திர சட்ட வல்லுநர் என்றால் மிகையாகாது எனக் குறிப்பிடுகின்றார். (15865)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
விலங்கியல் துறையின் சிரேஷ்ட
விரிவுரையாளராக கடமையாற்றும் **கலாநிதி**
**திருமதி. கஜவதனி பார்த்தூரன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

**திரு.சுப்பையாப்பிள்ளை கந்தசாமி**

அவர்கள் 04.06.2023 அன்று இறைபதமெய்தினார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா இறைவனின் திருப்பாதங்களில் அமைதி பெற பிரார்த்திக்கின்றோம். (15866)

**துறைத்தலைவர் மற்றும் ஊழியர்கள்**
**விலங்கியல்துறை - விஞ்ஞானபீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் தடுப்பு சட்டமூலத்தின் சில பிரிவுகள்

# அரசியலமைப்பிற்கு முரணானவை

## உயர் நீதிமன்றம்

(கொழும்பு)

**ஊழல் தடுப்பு சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்ற தீர்மானத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று செவ்வாய்க்கிழமை பாராளு மன்றில் அறிவித்தார்.**

குறித்த சட்டமூலத்தில் உள்ள சில சரத்துகள் அரசியலமைபிற்த முரணானவை என நீதிமன்றம் அறிவித்துள் ளதாக சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், நீதிமன்றத்தின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தம் சட்டமூலத்தில் செய்யப்பட்டால் முரண்பாடுகள் இருக்காது என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார். (நி)

# கடன் மறுசீரமைப்பு குறித்து இலங்கை-அமெரிக்கா பேச்சு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம், பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பிலும் இலங்கையும் அமெரிக்காவும் கலந்துரையாடியுள்ளன.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவிற்கும் ஆசியாவிற்கான அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவி செயலாளர் ரொபேர்ட் கப்ரோத் துக்கும் இடையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இக் கலந்துரையாடல் பலனளித்ததாகவும் இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டை படிப்படியாக தளர்த்துவதற்கான திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார மீட்புச் செயற்பாட்டிற்கான தொடர்ச்சியான ஆதரவிற்காக அமெரிக்க அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் தொழில்நுட்ப ஆதரவிற்கும் இராஜாங்க அமைச்சர் இதன் போது பாராட்டு தெரிவித்தார். (நி)

### அக்குரஸ்ஸ - வெலிகம வீதியில்

# பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் 9 பேர் காயம்



(கொழும்பு)

அக்குரஸ்ஸ - வெலிகம பிரதான வீதியின் உடுகாவ பிரதேசத்தில் இரண்டு பேருந்துகள் மோதி விபத்துக்குள்ளானதில் 9 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் இருவரின் நிலைக்வலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து அக்குரஸ்ஸ நோக்கிச் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றும் மாத்தறையிலிருந்து வெலி பிட்டிய நோக்கிச் சென்ற தனியார் பேருந்தும் ஒன்றுடன் ஒன்று மோதியே விபத்துக்குள்ளானதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (நி)

# கம்பளையில் நிலநடுக்கம்

(கொழும்பு)

கம்பளையில் 2.0 ரிக்டர் அளவில் சிறிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. (நி)

# இலங்கைக்கு கடத்த முயன்ற பெருமளவிலான கஞ்சா மீட்பு

(டில்லி)

இலங்கைக்கு கடத்த முயன்ற 240 கிலோ கஞ்சாவை சர்வதேச கஞ்சாக் கடத்தல் குழுவினரிடமிருந்து ஆந்திர பிரதேசத்தின் திருப்பதி மாவட்ட பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

பாரவூர்தியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொல்கத்தா-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சூலூர் பேட்டை யில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது சென்னையைச் சேர்ந்த 6 பேரும் ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த 2 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஆந்திரப் பிரதேசத்தை சேர்ந்த ஒருவரும் இலங்கையை சேர்ந்த ஒருவரும் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திருப்பதி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# களுத்துறையில் சீரற்ற காலநிலை பரீட்சை நிலையம் வெள்ளத்தில்

(களுத்துறை)

நாட்டில் சீரற்ற காலநிலையால் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையைத் தொடர்ந்து களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள மற்றும் வல்லாவிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்தோடு புளத்சிங்கள கல்வி வலயத்துக்கு உட்பட்ட கூடலிகம மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையம் வெள்ள நீரில் மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சார்த்திகளின் நலன் கருதி விசேட போக்குவரத்து வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வாழும் மக்களுக்கு உதவுவதற்காக இலங்கை கடற்படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (நி)

### திருமலை-கண்டி வீதியில்

# கனரக வாகனம்-வான் மோதி இருவர் ஸ்தலத்தில் உயிரிழப்பு

(திருமலை)

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் கனரக வாகன மொன்றுடன் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஸ்தலத்திலே இருவர் பலியாகியுள்ளதாக ஹபரன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை அலுத்ஓயா, சிங்ககம பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து கிண்ணியாவுக்குச் சென்ற வான் ஒன்றும் திருகோணமலையிலிரு ந்து கொழும்புக்குச் சீமெந்து மூடைகளை ஏற்றிச்சென்ற கனரக வாகன மொன்றுமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விபத்தில் கிண்ணியா பகுதியைச் சேர்ந்த 45 மற்றும் 47 வயதுடைய இருவரே பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வானில் பயணித்த மற்றொருவர் பலத்த காயங்களுடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கனரக வாகனத்தின் சாரதியும் உதவியாளரும் காயங் களுக்குள்ளாகியுள்ளதாகவும் விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# துருக்கி ஜனாதிபதியை சந்தித்தார் சபாநாயகர்



(அங்காரா)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகனுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற தையிப் எர்டோகனின் உத்தியோகபூர்வ அரச வைபவத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கலந்து கொண்டார்.

இந்த சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பல வருட கால இராஜதந்திர உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சபாநாயகர் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சமீபத்தில் உலகையே உலுக்கிய துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க முன் வந்த இலங்கைக்கு ஜனாதிபதி எர்டோகன் நன்றியும் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி செல்வநாதன் பத்மாவதி



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கு மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாதன் பத்மாவதி அவர்கள் 2023.06.06 செவ்வாய்க்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாச்சலம் - இராசமணி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை - நாகபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வநாதனின் அன்பு மனைவியும் வாணிமலர் (ஆசிரியர் - யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), திருமலர் (தொல்லியல் திணைக்களம் - வவுனியா), செல்வமலர் (மக்கள் வங்கி - தெல்லிப்பளை), றமணா (ஆசிரியர் - யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க,த.க.பாடசாலை), ஐங்கரன் (HNBA யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுதர்சன் (நீரியல் திணைக்களம்), பிரகலாதன் (ஆசிரியர் - வ/கோமரசன்குளம் மகா வித்தியாலயம்), கயேந்திரன் (பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்), கஜதுரஞ்சன் (ஆசிரியர் - வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கன்சிகா, கஷ்வின், வேதிசன், ருத்விகா, திபோஷன், ஷப்தகி, ஆயுஸ்மன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2023.06.07) புதன்கிழமை பி.ப 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:- குடும்பத்தினர்

(15870) தொ.பே:- 077 765 8443

# கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதல்

வடமராட்சி கிழக்கு அருணோதயா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குறித்த கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இத்தொடரின் இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.

அருணோதயா விளையாட்டுக்கழக தலைவர் சே.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகின் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான சி.சபா ஆனந்தும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர் பா.முகுந்தன், சக்கோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலய ஆசிரியர் அரியரஞ்சன், வடமராட்சி கிழக்கு உதைபந்தாட்ட லீக் தலைவர் சி.சிவநேசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி கே.அமரசிங்க, வடமரீட்சி கிழக்கு உதைபந்தாட்ட லீக் பொருளாளர் த.தங்கரதீஸ்வரன், ஆழியவளை பொருளாதார உத்தியோகத்தர் க.கஜரூபன், ஆழியவளை சமுர்த்தி உத்தியோகத்தர் கி.ராஜ்கிரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-90)


# அதிவேக ஓட்டக்காரர் ஜிம் ஹைன்ஸ் காலமானார்

## அதிர்ச்சியில் ரசிகர்கள்

கடந்த 15 ஆண்டுகளாக அதிவேகமாக ஓடும் வல்லமை கொண்டவராக திகழ்ந்தவரும் குறிப்பாக உலகின் அதிவேக ஓடும் மனிதராக இனங்காணப்பட்டவருமான ஒலிம்பிக் சம்பியன் ஜிம் ஹைன்ஸ் காலமானார்.

100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தை 10 விநாடிகளுக்குள் முடித்த முதல் மனிதர் இவர் என்று கூறப்படுகிறது.

ஜிம் ஹைன்ஸ் அமெரிக்க சம்பியன்ஷிப் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.9 விநாடிகளில் சாதனை படைத்துள்ளார். இறக்கும்போது அவருக்கு வயது 76 என்பது குறிப்பிடத்தக்கது. (நி)




# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2846

தக்ஷாயினி

வாத்தியார் பக்கத்து கிளாஸ் ல குச்சி வாங்கிட்டு வரச்சொல்லி மொத அடியே என்ன அடிக்கும் போது




நா செவனேனுதானடா இருந்தேன் குச்சி வாங்கிட்டு வரசொல்லி அடிச்சிட்டியேடா...

சாமந்தி

இன் ஸ்கூல் லைப்




டேய் நாளைக்கு கணக்கு டெஸ்ட் டா நாம எல்லாரும் லீவு போட்ரவேண்டியது தா...

குருப்பிரியா

நிழலின் அருமை வெயிலில் தெரியும்...



ஆசிரியர்களின் அருமை கோடை விடுமுறையில் தெரியும். (பெற்றோர்களுக்கு)

அர்ச்சுன்

சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தொலைவு தோராயமாக 150 மில்லியன் கிலோ மீற்றர்.



ஒருவேளை சுத்திக்கிட்டே சூரியன் பக்கத்துல பூமி போயிருச்சோ ரொம்ப சூடா இருக்கு...

நிஷாந்தன்

படிக்கும் போது தூக்கம் தூக்கமா வந்தா என்ன பண்ணனும்...



நமக்கு படிப்புத்தான் வரல... தூக்கமாவது வருதேன்னு தூங்கிடனும் சேர்...

கவிசன்

நீங்க ரெண்டுபேரும் வந்தபிறகு...!




இனிமேல் எவனும் பொண்ணு தரமாட்டானு தெரிஞ்சு போச்சுடா...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது- நீதி அமைச்சர்

(கொழும்பு)

கடந்த 8 வருடங்களில் சிறுவர் (இளம்பராய) குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக மேற் கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரிய வருவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டு முதல், 212 சிறுவர் குற்றவாளிகள் தற்போது வரை சிறுவர் சீர்திருத்த பள்ளிகளில் பயிற்சிகளை பெற்றுவரும், சிறுவர் குற்றவாளிகள் தொடர்பில் எழுப்பப் பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

2015ஆம் ஆண்டில் 43 பேரும், 2016ஆம் ஆண்டு 38 பேரும், 2017ஆம், 2018ஆம்; 2019ஆம், 2020ஆம், 2021 ஆம் மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் முறையே 33, 38, 36, 27, 19, 11 என்கிற எண்ணிக்கையில் சிறுவர் குற்றவாளிகள், சிறுவர் சீர்திருத்தப் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி களை பெற்றுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின் படியே சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளிகளில் சிறுவர் குற்றவாளிகள் அனுமதிக்கப்படுவார்கள். அதிகபட்சமாக 3 வருடங்கள் தண்டனையே இவர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த பள்ளிகளில் பயிற்சிகள் வழங்கப்படாது. மாறாக மனோ வைத்தியமுறையைப் பின்பற்றி அவர்களின் மன நிலைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறுவர் குற்றவாளிகள் தொடர் பான சட்டத்தை இக்காலத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப் போவதாகவும் தெரிவித்தார். (நி)

# உத்தேச ஒலிபரப்பு சட்டமூலம்

## எதிர்க்க எதிர்க்கட்சிகள் நடவடிக்கை

(கொழும்பு)

உத்தேச ஒலிபரப்பு அதிகார சபை சட்டமூலத்தை எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் ஏகமனதாக தீர்மானித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சியின் நிறைவேற்றுக் குழு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கூடிய போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த சட்டமூலத்தை தோல்வியடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை நீதிமன்றம் மற்றும் பாராளுமன்றம் ஊடாக எடுக்கவுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

குறித்த சட்டமூலத்தை ஆய்வு செய்வதற்காக எதிர்க்கட்சிகளின் ஒன்றியத்தினால் விசேட உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த உபகுழு எதிர்வரும் வாரமளவில் கூடவுள்ளது. குறித்த உபகுழு ஊடாக ஆய்வுக்கு உட்படுத்தப்படும் விடயங்கள் எதிர்காலத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் சகல தலைவர்களுக்கும் அறிவிக்கப்படவுள்ளது. (நி)

# உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைப்பது பொருத்தமானதல்ல

## ரோஹித அபேகுணவர்தன

(கொழும்பு)

உள்ளூரர்ட்சி மன்றத் தேர்தலை தொடர்ந்தும் பிற் போட்டால் மக்களிடம் நன்றாக வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டியது தான் என பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன பாராளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது பொருத்தமானதல்ல எனத் தெரிவித்த உறுப்பினர், இந்த நேரத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்றும் தெரி வித்தார்.

இல்லையேல், மாகாண சபைகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என தெரிவித்த உறுப்பினர், மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் வெள்ளை யானைகளை வைத்திருப்பதில் பலனில்லை.

ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கும், நாட்டுச் சட்டத்தை அகற்றுவதற்கும், நாட்டின் பொருளாதார நிலைமையை வலுப்படுத்துவதற்கும் பொதுஜன பெரமுனவின் 134 உறுப்பினர்களின் வாக்குகளினால் ஜனாதிபதி நியமிக்கப்பட்டதாகவும் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்திருந்தார். (நி)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
07 . 11 . 1982

ஆண்டவன் அடியில்
19 . 05 . 2022

## அமரர். தங்க வேலாயுதம் மயூரன்

தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் 2

திதி–07.06.2023 அபரபக்க சதுர்த்தி.

காலமெல்லாம் எம்மை காத்திருப்பாய்
என்றிருக்க– நீ
கண்ணீரை தந்துவிட்டு விண்ணோடு
சென்று ஆண்டொன்று ஆனது
ஆனாலும் ஆறவில்லை எம் துயர்
உன் அன்பு முகமும் நேசப் புன்னகையும்
மறையவில்லை எமைவிட்டு
வருடங்கள் நீளலாம்– ஆனால்
உன் நினைவுகள் என்றும் நீங்காது!

பொலிகண்டி. (C-6681)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
வாழும் குடும்பத்தினர்.


# இராசிபலன்

07.06.2023
வைகாசி 24, புதன்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 1.24 மணிவரை

உத்தராடம் பின்னிரவு 12.34 மணிவரை
சுபநேரம் -4.22-5.52 மணிவரை
இராகுகாலம்-11.52-1.22 மணிவரை

சங்கடஹர சதுர்த்தி விரதம்
அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்




மேஷம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும் கனவு பலிதமுண்டு.




ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தில் தேவையற்ற முரண்பாடுகள் தோன்றி மறையும்.




கடகம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வராத உறவினர்கள் திடீரென வீடுகளுக்கு வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.



சிம்மம்

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி கைகூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இனிமையான நாள்.




கன்னி

வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும் போசன சுகமுண்டு.




துலாம்

பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




விருச்சிகம்

எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




தனுசு

வீண் விரயங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.




மகரம்

ஆழ்ந்த சிந்தனையுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.



கும்பம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், தேவையற்ற விரயங்களை தவிர்த்துக் கொள்வது நல்லது, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.



மீனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

அதிர்ஷ்டம் வந்தால் தவிட்டுப் பானையிலும் தனம் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இடம்பெற்ற இன நல்லிணக்க நிகழ்வு

(முறிகண்டி)

இன நல்லிணக்க நிகழ்வு ஒன்று நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வு தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் மொழிகள் கற்கைபீட மண்டபத்தில் இடம் பெற்றது.

அனுராதபுரத்திலிருந்து குறித்த நிலையத்திற்கு ஒரு குழுவினர் விஜயம் மேற்கொண்டனர்.

அனுராதபுரத்தில் தமிழ் மொழி கற்கும் மாணவர்களிற்கும், கிளிநொச்சியில் சிங்கள மொழி கற்கும் மாணவர்களிற்குமிடையில் இன நல்லிணக்கத்தை வலுப்படுத்தும் வகையில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அரச பணியில் உள்ள குறித்த மாணவர்கள் பல்வேறு அரச திணைக்களங்களில் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில் இன்றைய ஒன்றுகூடல் மூலம் இன நல்லிணக்கம் மற்றும் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றை புரிந்து கொள்ள முடிவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த செயற் திட்டத்தினால் அனைத்து இனமத மொழிகளும் சமமாக மதிக்கப்பட்டு நல்லிணக்கத்துடன் இலங்கையில் வாழும் உணர்வு ஏற்பட்டுள்ளதாக பங்குபற்றியவர்கள் தெரிவிக்கின்றனர். (நி-100)

# ஊடகத்துறையை நசுக்கி நாட்டை இருண்ட யுகத்திற்குள் தள்ள முயற்சி

## சிறீதரன் எம்.பி

(கண்டாவளை)

**உத்தேச ஒளிபரப்பு ஒழுங்கு படுத்தல் சட்ட மூலத்தை கொண்டு அரசாங்கம் ஊடகத்துறையை நசுக்கி நாட்டை இருண்ட யுகத்திற்கு கொண்டு வந்தால் அது அவர்களுக்கே ஆபத்தாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்**

உத்தேச ஒலி மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலத்தை சட்டமாக்க இடமளித்தால் அது ஊடகத்துறையின் சுதந்திரம் பாதிக்கப்படுதல் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும் போது ஒரு ஜனநாயக நாட்டில் மிகப்பெரிய தூணாக இருப்பது ஊடகத்துறை.

ஊடகத்துறை மூலமே ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன



இந்த அரசானது ஊடகத்துறையை நசுக்கி அதை அடக்க நினைத்தால் அது அந்த நாட்டுக்குதான் அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஏற்கனவே ஊடகங்கள் மீது பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டு செய்திகள் வெளிவர முடியாது இருந்தது.

அவ்வாறான தொரு நிலையை கொண்டு வந்து நாட்டை மீண்டும் இருண்ட யுகத்திற்கு கொண்டு வந்தால் அது அவருக்கே இருண்ட யுகத்தை அளிக்கும் தொடர்ந்து இந்த சட்டத்தை நாம் எதிர்க்கின்றோம்

தொடர்ந்தும் அந்த சட்ட மூலத்திற்கு எதிரான எதிர்ப்பை நாங்கள் பதிவு செய்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.(நி-315)

# அமெரிக்க பேராசிரியர் கலாசாலையை பார்வையிட்டார்



(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவில் இருந்து வருகைதந்த சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை நிபுணரும் பேராசிரியருமாகிய தவம் தம்பிப்பிள்ளை தனது யாழ்ப்பாண வருகையின் ஓரங்கமாக தனது தாயார் கல்வி கற்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விஜயம் செய்தார். இதன்போது உள்ளக கரப்பந்தாட்ட போட்டியில் வெற்றிபெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.(நி-33)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் அறுபடை வீடு, முருகப்பெருமாள் திருப்பீடம் மற்றும் திருமுறிகண்டியில் அமைந்துள்ள இந்து மாமன்ற வன்னி அலுவலகம் திறப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் மா.தவயோக ராஜா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து சிறப்பிப்பார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையினை அகில இலங்கை இந்து மாமன்ற துணைத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் வழங்குவார். (நி)



கைதடி தெற்கு பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் மடை உற்சவம் நேற்று முன்தினம் அபிஷேக ஆராதனைகளுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது.பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த பக்தர்கள் வைரவப் பெருமானின் ஆசிகளை பெற்றுச் சென்றனர்.

(படம்- கஜிந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 280 | 300 | 400 |
| தக்காளி | 380 | 350 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 200 | 240 |
| கோவா | 400 | 450 | 450 | 400 |
| கரட் | 350 | 400 | 420 | 450 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 |
| புடோல் | 200 | 240 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 150 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 400 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 400 | 500 | 500 | 600 |
| வெண்டக்காய் | 200 | 150 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 450 | 250 | 200 |
| லீக்ஸ் | 350 | 380 | 420 | 500 |
| பீற்றூட் | 450 | 500 | 300 | 500 |
| கறிமிளகாய் | 300 | 400 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 800 | 1000 |
| போஞ்சி | 450 | 500 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 300 | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 100 | 100 |
| தேசிக்காய் | 350 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 90 | 70-90 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 600 | 700 |
| முள்ளங்கி | 120 | 200 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 180 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 200 | -- | 200 |

# நெடுந்தீவு கொலை வழக்கு

# சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு

(கரணவாய்)

நெடுந்தீவில் ஆறு பேர் கொலை செய்யப்பட்ட வழக்கின் பிரதான சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிவான் ஜே. கஜநிதிபாலன் நேற்று செவ்வாய்க் கிழமை உத்தரவிட்டார்.

கொலை வழக்கின் பிரதான சந்தேகநபரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் முற்படுத்தினர்.

இதன் போது கொலைக் குற்றம் புரிந்த பிரதான சந்தேகநபரை அடையாளம் காணும் பொருட்டு எண்மர் சாட்சியங்களாக யாழ்ப்பாண பொலிஸ் விஷேட குற்றத்தடுப்பு பிரிவினரால் வாக்குமூலம் பெறப்பட்டிருந்தது.

குறித்த சாட்சியங்களில் மூவர் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் சாட்சியமளித்துள்ளனர்.

வழக்கை விசாரித்த நீதவான் ஜே.கஜநிதிபாலன் சந்தேகநபரை எதிர்வரும் 20ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (நி-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கப்பட்ட ஒரு மங்கை

## இராமநாதன் கல்லூரி முதல் அதிபர்



கா.இந்திரபாலா

ஜூலை 7, பிரித்தானியப் பேரரசின் பெருநகராகிய லண்டனின் ஒரு மூலையில் வைத்தியர் குடும்பம் ஒன்றில் ஒரு பெண்குழந்தை பிறந்தாள். விக்டோரியா மகாராணி பிரித்தானியப் பேரரசின் தலைவியாகவும் இந்திய சாம்ராச்சியத்தின் பேரரசியாகவும் விளங்கிய காலம். எனினும் பெண்களின் நிலை சமூகத்தில் மிகவும் தாழ்வடைந்து காணப்பட்ட காலம். பல துறைகளிலும் முன்னேறிக்கொண்டிருந்த பிரித்தானியாவில், பெண்களுக்கு முன்னேற வசதி இல்லை. பாடசாலைப் படிப்புக்கு வாய்ப்பில்லை பல்கலைக் கழகத்துக்கு அனுமதி இல்லை. அரசியலில் வாக்குரிமை இல்லை. பெரும்பாலான பெண்களுக்கு எழுத்தறிவே இல்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் முன் குறிப்பிடப்பட்ட பெண்குழந்தை பிறந்து, பாடசாலைக்குச் சென்று, பல்கலைக் கழகத்தில் படித்து, பெண்களைக்கட்டுப்படுத்திய சமூகக்கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்து, நாட்டில் பெண்விடுதலைக்காகப் போராடி, இறுதியில் பெண்பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் ஆர்வமுடையவராய், யாழ்ப்பாணம் வந்து, இலங்கையில் இந்துப் பெண்பிள்ளைகளின் கல்விக்காக அமைக்கப்பட்ட முதலாவது நிறுவனமாகிய இராமநாதன்கல்லூரியின் முதல் அதிபராகப்பொறுப்பேற்றார்.

### புலொரென்ஸ் பார்

யார் இந்தப் பெண்மணி இவர் பெயர் புலொரென்ஸ் பார் . இவர் தாயார் மேரி எலிஸபெத், தந்தையார் வில்யம் பார். பெண்ணுரிமைகளை ஆதரித்த ஒருவர் தந்தையாக இருந்தமையால் புலொரென்ஸ் Cheltenham Ladies College என்ற பாடசாலைக்குச் செல்ல வாய்ப்பைப் பெற்றார்.

1868 இல் முதல் முறையாக இங்கிலாந்தில் ஒரு பல்கலைக்கழகம் பெண்களை அனுமதிப்பதற்கு முன்வந்தது. அது லண்டன் பல்கலைக்கழகம். பெண்களைப்படிக்கவிட்டாலும், அவர்களுக்குப் பட்டம் (degree) வழங்கப்படவில்லை சான்றிதழ் மட்டுமே கொடுக்கப்பட்டது. 1878 இல் இருந்துதான்பெண்களுக்கும் பட்டம் வழங்கும் அதிகாரம் லண்டன் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்தது. பாடசாலைக் கல்வியை முடித்து புலொரென்ஸ் லண்டன் பல்கலைக்கழகத்தில் படிப்பைத்தொடர்ந்தார்.

### வாழ்க்கைத்தொழில்

பல்கலைக்கழகத்துப் பரீட்சை முறைகளையும் பிற அம்சங்களையும் விரும்பாத புலொரென்ஸ், படிப்பை முடிக்காது வெளியேறி ஓர் ஆசிரியராகத் தன் தொழில்வாழ்க்கையைத் தொடங்கினார். இரண்டு ஆண்டுகளில் அத்தொழிலையும் விட்டு, கலைத்துறையை நாடினார். அவருக்குக்கலைகளில், சிறப்பாக இசை, ஓவியம், நாடகம் ஆகியவற்றில், அதிக ஆர்வம் இருந்தது. அழகிய தோற்றமும் நடிப்புத்திறனும் பெற்றிருந்த புலொரென்ஸ் நாடகத்துறைக்குள் நுழைந்தார்.

### புகழ்பெற்ற நடிகர்

தன் நடிப்புத் திறன் காரணமாக அக்காலத்தில் எழுச்சி பெற்றுக் கொண்டிருந்த பல இளம் நாடகாசிரியர்களுடைய நட்பை புலொரென்ஸ் பெற்றார். அவர்களுள் இருவர் அவருடைய உற்ற நண்பர்களாகினர். இருவரும் பின்னர் ஆங்கில இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவர்கள். ஒருவர் பேர்னாட் ஷோ (Bernard Shaw), மற்றவர் வில்யம் பட்லர்யேற்ஸ். (William Butler Yeats).

### பொன்மய உதயம்

நாடகத்தில் ஒரு சிறந்த நடிகராக விளங்கிய காலத்திலும் புலொரென்ஸ் தன் முதல் குறிக்கோள் ஆகிய பெண் விடுதலையைப் புறக்கணிக்கவில்லை. பெண்களைக் கட்டுப்படுத்தும் விக்டோரிய ஒழுக்கநெறி வழியாகப்பெண்கள்மீது ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் சமூக அமைப்புக்குத் தன்னுடைய பாரம்பரிய மதமும் அதனைத் தோற்றுவித்த பின் புலப்பண்பாடுமே காரணம் என்ற முடிவுக்கு புலொரென்ஸ் தன் ஆய்வுகள் மூலம் வந்தார். இதன் விளைவாக, அக்காலத்துப் பிற மேற்கத்திய சீர்திருத்தவாதிப் பெண்கள் சிலரைப்போன்று, இவர் தன் பாரம்பரியமதத்தில் இருந்து விலகிச் சென்றார்.



Florence Farr, with her pupils at the Ramanathan College, Ceylon.

பெண்களை அடிமைப்படுத்தாத தொல் கால மதங்கள் இவருடைய கவனத்தை ஈர்த்தன. இதன் விளைவாகத் தொல்கால மதக்கிரியைகளில் ஈடுபட்ட Golden Dawn(பொன்மய உதயம்) என்ற மதக்குழுவைச் சேர்ந்து, புலொரென்ஸ் ஒரு புதிய பாதையில் செல்லத் தொடங்கினார்.

இதே காலப்பகுதியில் இவர் Edward Emery (எட்வர்ட்எமெரி)என்ற ஒரு நடிகரை மணஞ்செய்தார். ஆனால் நான்கு ஆண்டுகளின் பின் கணவர் அமெரிக்காவுக்குச் சென்று திரும்பி வரவே இல்லை. இதன் காரணமாக, புலொரென்ஸ் விவாகரத்துச் செய்து கொண்டார்.

### வேதாந்தத்தில் ஈடுபாடு

இருபதாம் நூற்றாண்டு தொடங்கிய போது புலொரென்ஸ் கொண்டிருந்த மத நம்பிக்கைகள் மேலும் மாற்றம் அடைந்தன. இறையியலிலும் (theosophy) கீழைத்தேசமதங்களிலும் அவர் கவனம் திரும்பியது. இந்திய வேதாந்தக் கருத்துக்களைக் கற்றறிந்து, அவை பற்றி எழுதினார். அது மட்டுமல்லாது, அக் காலத்தில் பிரபலம் அடையத்தொடங்கிய பிரம்ம ஞான சபை எனத் தமிழில் வழங்கும் Theosophical Society என்ற நிறுவனத்தில் சேர்ந்தார் (பிரம்ம ஞானசபையின் தலைமை அலுவலகம் தற்பொழுது சென்னையில் உள்ளது).

### பெண்ணின் நூற்றாண்டு

இருபதாம் நூற்றாண்டு உதயமாகிய போது பிரித்தானியப் பேரரசு உலக வரலாறு கண்டிராத மிகப் பெரிய வலிமை மிக்கப் பேரரசாகக் காணப்பட்டது. ஆனால் பெண்ணுக்குப் பிரித்தானியாவில் வாக்குரிமையே இல்லை. பெண்களுக்கு உரிமை கோரி நடைபெற்ற போராட்டங்கள் வலுப்பெற்றன. புலொரென்ஸ் இவற்றில் ஒரு முக்கிய வகிபாகம் கொண்டிருந்தார். அவர் 1910 இல் எழுதிய நூலொன்றில் இருபதாம் நூற்றாண்டு பெண்ணின் நூற்றாண்டாகும் என அறைகூவினார். "இது பெண்ணின் நூற்றாண்டாகப் போகிறது. இதில் அவள் தன் நீண்ட தூக்கத்தில் இருந்து எழுந்து தன் இராச்சியத்துக்கு வருவாள்"என்பது அவர் கூற்று.

### இராமநாதனைச் சந்தித்தல்

பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையும் கட்டத்தில் இலங்கையில் பௌத்த மற்றும் இந்துப்பெண் பிள்ளைகளுக்குத் தனியான பாடசாலைகள் இல்லாத குறையை நிவர்த்தி செய்யச் சில முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவற்றின் விளைவாக 1890இல் பௌத்த மகளிர் பாடசாலை ஒன்று கொழும்பில் நிறுவப்பட்டது.

இதே காலமளவில் இலங்கையில் அரசியலிலும் சமூகத்திலும் ஒரு பிரமுகராக விளங்கிய பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் இந்து மகளிர் பாடசாலை ஒன்றை அமைப்பதற்கு எண்ணம் கொண்டிருந்தார். 1902இல் இராமநாதன் லண்டனுக்குச் சென்று, இந்து மதத்தத்துவங்கள் பற்றி விரிவுரைகள் ஆற்றிய போது புலொரென்ஸ் அவரைச் சந்தித்து உரையாட வாய்ப்புக் கிட்டியது. அப்பொழுது இராமநாதன் இந்துப் பெண்களுக்கு ஒரு பாடசாலை அமைக்கத் தான் கொண்டிருந்த திட்டத்தை வெளிப்படுத்தினார்.

அப்படி ஒரு பாடசாலையை அமைக்கும் திட்டம் நிறைவேறிய காலத்தில் அப்பாடசாலையில்பணியாற்றத் தான் விரும்புவதாக புலொரென்ஸ் இராமநாதனுக்குக் கூறினார். பத்து ஆண்டுகளின் பின், 1912இல், இந்து மகளிர்க்கான பாடசாலை கட்டப்பட்டு முடியும் கட்டத்தை அடைந்தது. இராமநாதன் இச் செய்தியை புலொரென்ஸ் அம்மையாருக்கு அறிவித்தார்.

### இலங்கைக்குப் பயணம்

உடனே புலொரென்ஸ்இலங்கைக்குப் புறப்படத்தயாரானார். தனக்கு இருந்த சொத்துக்கள் அனைத்தையும் விற்று, நண்பர்களையும் விட்டு, செப்டெம்பர் 1912இல் கப்பல் ஏறி இலங்கைக்குச் சென்றார்.

இராமநாதன் அவரைச் சில மாதங்கள் தன் கொழும்பு வீட்டில் தங்க வைத்துத் தமிழைப் படிப்பதற்கும் வசதி செய்தார்.

### பாடசாலை அதிபர்

1913 ஜனவரி 20 இல் சுன்னாகத்தில் அமைக்கப்பட்ட இந்து மகளிர்க்கான இராமநாதன் கல்லூரி திறக்கப்பட்டது. இந்துப் பெண்பிள்ளைகளுக்காக இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது பாடசாலையின் முதல் அதிபராக புலொரென்ஸ் அம்மையார் திருமதி .புலொரென்ஸ் பார் எமெரி (Mrs. F.F. Emery) என்ற பெயருடன் அறிமுகமானார்.

மேற்கத்திய பண்பாடு மெதுவாகப் பரவிக் கொண்டிருந்த அக்காலத்தில் பாரம்பரியப் பண்பாட்டைப் பேணுவதற்குப் பெண்கல்வி அவசியம் என இராமநாதன் நம்பினார். தனது பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் மதத்தையும் கற்றறிந்த பெண் தன் பிள்ளைகளைத் தேசியப்பண்புகளை இழந்தோராய், மேற்கத்திய பண்பாட்டில் மோகம் கொண்டோராய் மாறுவதைத் தடுக்க உதவுவாள் என்பது அவர் கொள்கை, இதற்கான கல்வியைப் பெண்ணுக்குக் கொடுப்பதற்குப் பாரம்பரிய குருகுலவாசமுறைப்படி இயங்கும் ஒரு பாடசாலையாக இராமநாதன் கல்லூரியை அமைத்தார்.

இத்தகைய பாடசாலையில் முதலாவது அதிபராகக் கடமையாற்றிய புலொரென்ஸ் அம்மையார் நீண்ட காலம் பணியாற்றும் வாய்ப்பைப் பெறவில்லை. 1916 இறுதியில் புற்றுநோய் அவரைப் பீடித்தது.

நோயைத் தீர்ப்பதற்குக் கொழும்பில் செய்யப்பட்ட அறுவை சிகிச்சை பலனளிக்காது போக, புலொரென்ஸ் அம்மையார் 1917 ஏப்ரிலில் காலமானார். அவர் கேட்டுக்கொண்டபடி, உடம்பு தகனம் செய்யப்பட்டுக் களனிகங்கையில் சாம்பர் இடப்பட்டது.

இலங்கையில் பெண் கல்வி வரலாற்றில், குறிப்பாக யாழ்ப்பாணத்தின் கல்வி வரலாற்றில் இராமநாதன் கல்லூரி அமைக்கப்பட்டமை ஒரு முக்கியமான நிகழ்ச்சியாகும். அதில் பங்கு கொண்டு, யாழ்ப்பாணப் பெண் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதற்குத் தன் நாட்டைவிட்டுவந்த புலொரென்ஸ் அம்மையார் மறக்க முடியாத ஒருவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர்

198





"தஞ்சாவூருக்குச் சென்று சக்கரவர்த்தியிடம் ஓலையைக் கொடுத்து விட்டான் என்று கேள்விப்படுகிறேன்."

"அப்புறம் என்ன நடந்தது? அதற்குச் சக்கரவர்த்தி என்ன மறுமொழி சொன்னாராம்?"

"மறு நாளைக்கு விடை எழுதித் தருவதாகச் சொன்னாராம். அதற்குள் அவன் பேரில் பழுவேட்டரையர்களுக்கு ஏதோ சந்தேகம் வந்து விட்டது. அவர்களுடைய கட்டுக் காவல்களையெல்லாம் மீறிக் கொண்டு அவன் எப்படியோ தப்பித்துச் சென்று விட்டானாம்!"

"அப்படியானால் அவன் மிகச் சாமர்த்தியசாலிதான் சந்தேகமில்லை. அப்புறம் நீ என்ன செய்தாய்? காஞ்சீபுரத்திலிருந்து கிளம்பியபின்?"

"நேரே இங்கு வருவதற்காகவே புறப்பட்டேன். வழியில் வீரநாராயணபுரத்தில் பெருமாளைத் தரிசிக்கத் தங்கினேன். தங்கிய இடத்தில் பெருமாள் அருளினால் ஒரு பெரிய இரகசியத்தை அறியும்படி நேர்ந்தது."

"அது என்ன? இன்னும் ஒரு இரகசியமா?"

"ஆம், தாயே! கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் அன்று இரவு ஒரு பெரிய விருந்து என்று தெரிந்தது. அந்த விருந்துக்குப் பெரிய பழுவேட்டரையர் வந்தார். அவருடன் இளையராணியின் பல்லக்கும் வந்தது!"

"திருமலை! எல்லாம் அவளுடைய செயல்தான்! இந்தச் சோழ நாட்டுக்கு இப்போது நேர்ந்திருக்கும் ஆபத்து அந்தப் பெண்ணால் ஏற்பட்டது தான்! அவளை நீ சந்தித்துப் பேச முடிந்ததா?"

"முடியவில்லை, அம்மா! முடியவில்லை! தங்கள் கட்டளையின் பேரில் அந்தப் பெண் பாம்பை என் சகோதரியாகப் பாவித்து எத்தனை வருஷம் வளர்த்தேன்! எங்கெல்லாம் தேடி அலைந்து பிரபந்த பாசுரங்களைக் கற்றுக் கொண்டு வந்து அவளுக்குக் கற்பித்தேன்! அதையெல்லாம் நினைத்துப் பார்த்தால் என் நெஞ்சம் கொதிக்கிறது! பெரிய பழுவேட்டரையரின் ராணியான பிறகு அவள் என்னைப் பார்க்கக் கூட மறுக்கிறாள்!"

"அதற்காக வருத்தப்பட்டு என்ன பயன்? இந்த உலகத்து மனிதர்களின் காரியங்கள் இப்படித்தான். நினைப்பது ஒன்றும் நடப்பது ஒன்றுமாக முடிகிறது. அப்புறம் கடம்பூரில் நடந்தது என்ன?"

"பல்லக்கிலே வந்தவள் நந்தினிதான் என்று எண்ணிக் கொண்டு எப்படியாவது அவளைச் சந்திப்பது அல்லது ஓலை எழுதி அனுப்பியாவது எச்சரிக்கை செய்வது என்ற உத்தேசத்துடன் கடம்பூருக்குச் சென்றேன். பெரும் அபாயத்துக்குத் துணிந்து கடம்பூர் மாளிகையின் வெளிச் சுவர் ஏறி குதித்தேன் அப்போது தான் அந்த அதிசயமான மர்ம இரகசியம் தெரிய வந்தது."

"திருமலை! உன் வழக்கமே இப்படித்தான். மேலும் மேலும் ஆவலைக் கிளப்புவாயே தவிர, செய்தியைச் சொல்ல மாட்டாய். அது என்ன அப்படிப்பட்ட அதிசயமான மர்ம இரகசியம்..?"

"மன்னிக்க வேண்டும், தாயே! அதைச் சொல்லுவதற்கே தயக்கமாயிருக்கிறது. மூடு பல்லக்கில் இருந்தது பழுவூர் இளையராணி அல்ல.

(தொடரும்)

# ஹெய்ட்டியில் வெள்ளத்தில் சிக்குண்டு 42 பேர் உயிரிழப்பு

(ஹெய்ட்டி)

ஹெய்ட்டியில் வெள்ளத்தில் சிக்குண்டு 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹெய்ட்டியில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழை காரணமாக அங்கு வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது.

இந்த நிலையில் வெள்ளத்தில் சிக்குண்ட 84 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



அத்துடன் வெள்ளத்தினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் 13 ஆயிரத்து 300 இற்கும் அதிகமானோர் வீடுகளை இழந்து நிர்க்கதி அடைந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# இஸ்ரேலில் வெப்பக்காற்று வீசியதால் 220 இடங்களில் தீ விபத்து

(இஸ்ரேல்)

இஸ்ரேல் நாட்டில் சில பகுதிகளில் வெப்பநிலை 43 டிகிரி செல்சியசை தாண்டியது. இது இஸ்ரேல் வரலாற்றில் ஜூன் மாதத்தில் பதிவான அதிகபட்ச வெப்ப அளவாகும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மைய தரவுகள் கூறுகின்றன.

இந்த வெப்பக்காற்று காரணமாக மின்துறையின் உட்கட்டமைப்பு சேதம், மின்சார தடைகள் போன்றவற்றை இஸ்ரேல் எதிர்கொண்டது. இதன் காரணமாக பல இடங்களில் தீ விபத்துகளும் ஏற்பட்டன. எனவே இதன் பாதிப்புகளில் இருந்து தப்பிக்க இஸ்ரேல் அரசாங்கம் பொது மக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

இதற்கிடையே வெப்ப அலை காரணமாக இஸ்ரேல் நாட்டில் சுமார் 220 திறந்த வெளிப் பகுதிகளில் தீ விபத்து ஏற்பட்டதாக தீயணைப்பு துறை தெரிவித்தது.

இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்த தகவல்கள் இன்னும் தெரியவில்லை. எனினும் தீயணைப்புத் துறையினரின் துரிதமான நடவடிக்கையால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாக இஸ்ரேல் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# நொவா கக்கோவா அணை ரஷ்ய படையினரால் தகர்ப்பு

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



(கீவ்)

நிப்பர் ஆற்றின் மீது உள்ள நொவா கக்கோவா அணைக்கட்டை ரஷ்ய படையினர் தகர்த்துள்ளனர் என குற்றம்சாட்டியுள்ள உக்ரைன் பாரிய வெள்ள ஆபத்துள்ளதால் அந்த பகுதி களில் வசிக்கும் மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளது. அணையின் சுவர்கள் நீரில் வீழ்ந்து கிடப்பதையும் பெருமளவு நீர் வெளியேறிக் கொண்டிருப்பதையும் காண்பிக்கும் படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

ரஷ்ய ஆக்கிரமிப்புப் படையினர் நீர்மின் அணைக்கட்டை தகர்த்துள்ளனர் என உக்ரைன் இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்துகொண்டால்போதும். அதனைக்கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம். ~ ஹேராம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையும் ஆசிரியத்துவத்தின் அறியாமையும்

உலகில் கல்வி அறிவில் மிகவும் உயர்ந்த நாடாக பின்லாந்து (Finland) மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகைமையை பல வருடங்களாக வேறு எந்த நாடும் முறியடிக்கவில்லை.

இவ்வாறு படிப்பில் உயர்வாக இருக்கக் கூடிய பின்லாந்தில் ஏழு வயதிலேயே மாணவர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர்.

அதுவரை பிள்ளைகள் வீடுகளில் தம் பெற்றோர்களுடன் வாழ வேண்டும் என்பது அந்த நாட்டின் இறுக்கமான முடிவு.

இதுதவிர, அங்கு தனியார் கல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை.

ஆக, பாடசாலைக் கல்வியால் மட்டுமே அந்த நாடு உலகின் கல்வித் தரத்தில் முதலிடத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

ஆனால் எங்கள் நாட்டில் மூன்று வயதை முழுமையாக அடைய முன்பே நாம் பிள்ளைகளைப் பாலர் பாடசாலைக்கு அனுப்பி விடுகின்றோம்.

இதைவிட, தரம் ஒன்றில் ரியூசன் வகுப்புகளும் ஆரம்பித்து விடுகின்றன.

இந்த நிலையில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எங்கள் பிள்ளைகளை வதை செய்யும் முகாமாக அமைகிறது.

அந்தோ! கொடுமை. தரம் 5 மாணவர்களைப் புலமைப் பரிசில் பரீட்சைக்காகத் தயார்படுத்துவதில் எம் பெற்றோர் போர்க் காலச் சூழலில் இயங்குவதுபோல நடந்து கொள்கின்றனர்,

இவ்வாறாக தரம் ஐந்தில் வதைபட்டு, கஷ்டப்பட்டு, துன்பப்பட்டு பரீட்சைக்குத் தோற்றினால், வெட்டுப்புள்ளியை எட்டுவதற்கு ஒரு புள்ளி போதாது என்ற முடிவு அந்தப் பிள்ளைகளின் பிஞ்சு உள்ளங்களை நெருப்பில் தள்ளிவிடுகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், கடந்த 2022ஆம் ஆண்டு நடந்த புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் வழமைபோல மீள் மதிப்பீட்டுக்கான விண்ணப்பம் கோரப்பட்டது.

இவ்வாறு மீள் மதிப்பீடு செய்வதற்காக விண்ணப்பித்த மாணவர்களில் நாடு பூராகவும் 146 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேலான பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

அதாவது 146 மாணவர்களின் விடைத்தாள்கள் சரியாகத் திருத்தப்படாமல், அந்த மாணவர்களின் புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதனை இன்னும் ஒருபடி மேற்சென்று கூறுவதாயின், விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்ட தகைமையற்ற ஆசிரியர்களின் கைகளில் அகப்பட்ட 146 மாணவர்கள் மீள் மதிப்பீட்டின் மூலம் தப்பிப் பிழைத்துள்ளனர்.

இதனைக் கூறும்போது, அடக்கடவுளே! மீள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்காமல் விட்டதால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எத்தனையோ என்று மனம் ஏங்குகிறது.

ஆக, விடைத்தாள் திருத்துகின்ற மனநிலை இல்லாத ஆசிரியர்கள் அந்தப் பணியை மேற்கொள்ளாமல் இருப்பது பெரும் புண்ணியம் செய்வதாக அமையும்.

# சட்டவிரோதமான செயற்பாடுகளை விடுத்து தேர்தலை நடத்துங்கள்

## சபையில் எதிர்க்கட்சி தலைவர்

(கொழும்பு)

சட்டவிரோதமான செயற்பாடுகளை விடுத்து முறையாக தேர்தலை நடத்துங்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், பணமில்லை எனக் கூறி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டாலும்,

சுற்றறிக்கைகள் மூலம் அரசியல் கைக்கூலிகளை நியமித்து உள்ளூராட்சி மன்றங்களை தமக்கு விருப்பமானவாறு கட்டுப்படுத்த முயற்சித்து வருவதை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த சுற்றறிக்கையின் மூலம், உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை ஒருங்கிணைக்க, ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிக்க, ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் புதிய சபைகளை ஏற்படுத்தாமல் அரசியல் அடியாட்கள் மூலம் உள்ளூராட்சி மன்றங்களை கட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அத்துடன், நீதித்துறை சாரார்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, மக்கள் தேர்தலை விரும்பவில்லை எனவும், பாராளுமன்றத்தில் எவருக்கும் 50 சதவீத பெரும்பான்மை இல்லை எனவும் தெரிவித்திருந்ததாகவும்,

சபையில் எதிர்க்கட்சித் தலைவர், பிரதமருக்கு சவால் விடுத்து தேர்தலொன்று நடத்தினால் 2/3 அல்லது 5/6 ஆக இருந்தாலும் தம்மால் பெருன்பான்மையை எடுத்துக் காட்டலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி உயர் நீதிமன்ற நீதிபதிகளை விருந்துபசாரத்துக்கு அழைத்து, இது போன்ற நீதி நியாயமான நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டிய நிலையில்,

விருந்துபசார நிகழ்ச்சிகளை நடத்துவது தார்மீகமல்ல என்றும், சுதந்திர தீர்ப்புகளுக்கு இது இடையூறாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாத பட்சத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறும், இதற்கு தேவையான் சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான கூடிய ஒத்துழைப்பை வழங்குவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார். (ம)

# சமூக ஊடகங்களில் தனிப்பட்ட தகவல்களை பகிர வேண்டாம்

## பொலிஸார் எச்சரிக்கை

தனிப்பட்ட தகவல்களை மற்றுமொரு தரப்பினருக்கு- வழங்க வேண்டாம் என பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் மூலம் பண மோசடி சம்பவங்கள் தொடர்பில் அதிகளவிலான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட தகவல்களை வழங்குதல் மற்றும் சமூக ஊடகங்களில் பரிமாறுதல் போன்ற விடயங்களில் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு இதன்போது தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன் தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நபர் ஒருவர் தனது தனிப்பட்ட தகவல்களை மற்றுமொரு தரப்பினருக்கு வழங்கும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

எந்தவொரு சூழ்நிலையிலும் தனது தனிப்பட்ட தகவல்களை வழங்கும் போது, குறிப்பாக தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பவற்றின் நகல், வீட்டு முகவரி, குடும்பம் தொடர்பான தகவல்கள், வங்கி கணக்கிலக்கம் தொடர்பான தகவல்கள், வரவு மற்றும் செலவு அட்டை விவரங்கள், வங்கி அட்டைகளுக்கு வழங்கப்படும் இரகசிய இலக்கம் (OTP) என்பவற்றை எக்காரணம் கொண்டும் அடையாளந்தெரியாத தரப்பினரிடம் கொடுக்க வேண்டாம்.

மோசடிக்காரர்களின் கவர்ச்சிகரமான சலுகைகள், அவர்களால் முன்வைக்கப்படும் போலி பிரசாரங்கள் என்பவற்றை நம்பி ஏமாற வேண்டாம்.

இத்தகைய மோசடி செய்பவர்கள் சமூக ஊடகங்கள் மூலம் உங்களை அணுகலாம். மோசடிக்காரர்களின் போலியான வாக்குறுதிகளை நம்பி தகவல்களை வழங்குவதன் மூலம் நிச்சயம் ஏமாற்றப்படுவீர்கள்.

இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டு உங்கள் சொத்துக்களை இழக்க வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

# யாழ். மின்சார சபையில் சனிக்கிழமைகளிலும் பணம் செலுத்தலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தில் சனிக்கிழமைகளிலும் பணம் செலுத்தும் பகுதி பொதுமக்களின் நன்மை கருதி செயற்படும் என வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் பொறியியலாளர் செ.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும்10.06.2023 சனிக்கிழமை தொடக்கம் தினமும் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை பணம் செலுத்தும் பகுதி திறந்து இருக்கும் என பிரதிப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (ம-33)

# பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனைக்குத் தடை பரிசோதனை நடவடிக்கை தீவிரம்

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

(கொழும்பு)

இலங்கையில் தடை செய்யப்பட்ட பொலித்தீன்மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் விற்பனை செய்யப்படும் இடங்களை கண்டறியும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் முதல் தடை செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் இன்று முதல் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்படும் எனவும் மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைவர் சுபுன் எஸ்.பத்திரன குறிப்பிட்டுள்ளார்.

பிளாஸ்ரிக் பொருட்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை கருத்தில் கொண்டு, பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் பலமுறை தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே குறித்த சோதனை நடவடிக்கை நேற்று முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

25

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



ஆழ்கடல் வளம் முழுவதும் அவர்கள் தான் பயன்படுத்துகின்றார்கள். நாங்கள் பயன்படுத்துவதில்லை.

முல்லைத்தீவில் அட்டை பிடிக்கும் பிரச்சனை பெரும் பிரச்சனை. தென்பகுதி மீனவர்களுக்குத்தான் ஆழ்கடலில் மூழ்கி அட்டை பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. எங்களுக்கு அவ்வாறு வழங்குவதில்லை.

இலாபம் முழுக்க அவர்கள் தான் பெற்றுக்கொள்கின்றார்கள். கடல் அட்டையை பிடித்து மதிப்புக் கூட்டி தென்பகுதி நிறுவனங்களுக்கு ஏற்றுவது வரை அவர்களே பார்க்கின்றார்கள். மன்னாரில் எங்களுடைய ஆட்கள் சிலர் பிடிக்கின்றார்கள். ஒரு அட்டை 50 ரூபா தான். சில அட்டை 20 ரூபா. இரண்டு இன அட்டைதான் இருக்கின்றது. அவர்களுக்கு ஒரு நாளைக்கு 300, 400 அட்டை கிடைக்கும் என்கிறார்கள். இதை ஒரு கம்பனி எடுத்துச் சென்று தாங்களே மதிப்புக்கூட்டி வர்த்தகம் செய்கின்றது. அதனை நாங்கள் செய்வதற்கான வாய்ப்பு எங்களிடம் இல்லை.

கடுமையாக உழைத்து அவர்களுக்குத்தான் கொடுக்கின்றமே தவிர வேறொன்றுமில்லை. பெரிய பிரச்சனையாக அட்டைப்பிரச்சனை இருக்கின்றது. அவர்கள் அட்டை பிடிக்கும் போது எங்களுடைய வலைகளை வெட்டிவிடுவார்கள். தென்பகுதி மீனவர்களால் எங்களுக்கு பாரிய பிரச்சனை இருக்கின்றது. இதைப்பற்றி பாராளுமன்றத்திலே யாருமே கதைப்பதில்லை.

மீன் வளத்தைப் பாதுகாப்பதற்காக இழுவை மடி வலைகள் உலகம் முழுவதும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. வடமராட்சியில் வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணத்தில் குருநகர் போன்ற இடங்களில் 300, 400 றோலர் நிற்கின்றது. அதனால் வருமானம் இருக்கின்றது. இறால், அட்டை, நண்டு பிடிபடுவதனால் நிறைய வருமானம் இருக்கின்றது. இதனால் நன்மையும் இருக்கின்றது ஆனால் தீமையும் இருக்கின்றது.

அதற்கு தீர்வு என்ன? இது ஒரு அரசியலாக போய்க் கொண்டிருக்கின்றது. அதற்கு தீர்வு இன்னும் கண்டு பிடிக்க முடியாமல் இருக்கின்றது. றோலர் பயன்பாட்டை நிற்பாட்டினால் இறால் எப்படி பிடிக்க முடியும் என்று அவர்கள் கேட்கிறார்கள். இறால் பிடிப்பதற்கும் றோலர் தான் நல்ல முறை. இதைவிட வேறு முறை இருந்தாலும் றோலராலே பிடிக்கின்ற மாதிரி பிடிக்க முடியாது. டிஸ்கோ நெட் ஆலும் இறாலைப் பிடிக்கலாம். சரியான முறையில் இறால் பிடிப்பதற்கான பொறிமுறையை நாங்கள் இன்னும் கண்டு பிடிக்கவில்லை. அதற்கான தொழிநுட்பவியலாளர்கள் இங்கு இல்லை. றோலர் பயன்பாட்டை நிற்பாட்டுவதென்றால் வேறு வழி முறையை கண்டுபிடித்து கொடுக்க வேண்டும்.

கடல் அட்டை, நண்டு, இறால் போன்றவை வளர்க்கலாம். இங்கு அதற்கு சரியான இடம் இருக்கின்றது. ஆனால் சரியான ஆளணி இல்லை, முதலீடில்லை, பாதுகாப்பு இல்லை அவ்வாறாக நிறைய பிரச்சினை இருக்கின்றது. அது பற்றிய ஆய்வும் இல்லை அக்கறையும் இல்லை. வடக்கு கிழக்கு கடல் வளத்திற்கு இந்திய மீனவர்களும், தென்பகுதி மீனவர்களும் பெரிய அச்சுறுத்தலாக இருக்கின்றார்கள்.

எல்லா துறைமுகங்களும் கடற்படையினரிடமே இருக்கின்றது. துறைமுகங்களை நாங்கள் பயன்படுத்த முடியாது. இன்று மீன்பிடித் துறைமுகம் என்று சொல்லி ஒன்றுமில்லை. மயிலிட்டித்துறைமுகம் தான் கொஞ்சம் விடப்பட்டிருக்கின்றது. கொஞ்சப்பேர் போயிருக்கின்றார்கள். அதிலும் சில இடங்கள் இன்னும் விடவில்லை. முக்கியமான இடங்கள் விடப்படவில்லை. அந்த மக்கள் இன்னமும் முகாமில் இருக்கின்றார்கள்.

இந்தியாவில் கொஞ்சப்பேர் இடம் பெயர்ந்து முகாம்களில் இருக்கின்றார்கள். அவர்கள் பெரும்பாலும் மீனவர்கள். அவர்கள் இன்னமும் வரவில்லை. வந்து தங்கள் தங்கள் இடத்திற்கு போக வேண்டும். இடப்பெயர்வு, மீளக்குடியேற்றல், தற்கால குடியிருப்பு பிரச்சனைகள் என பல பிரச்சனைகள் இருக்கின்றன.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு இரண்டு கண்ணுமில்லை, இரண்டு கைகளுமில்லை. ஒருவருக்கு ஒரு கையில்லை. இவையெல்லாம் எதனால்? சட்ட விரோதமாக டைனமற் வெடிபொருள் பயன்படுத்தி மீன் பிடித்ததனால் ஆகும். பெரிய கடல் பன்றிகளை டைனமற் அடிச்சு பிடிக்கின்றார்கள். இதனால் கடலில் வாழ்கின்ற சிறிய மீன்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. ஏராளமாக செத்து மிதக்கின்றன.

கரையோரத்தில் கண்டத் தாவரங்கள் எல்லாம் வெட்டி. கண்டல் தாவரங்கள், மரக்குற்றியை ஏற்றிக் கொண்டு போய்விடுவார்கள். படுப்பு வலை போட்டால் அதிலே சிக்கி வலை எல்லாம் கிழிந்து அழிந்து போய்விடும். வலிச்சல் வலை வழிந்து போனால் தான் மீன் படும். இடையிலே இந்த குற்றிகளில் வலை சிக்கினால் வலை வழியாது. இதனால் மீன் படாது. வலை சேதமாகும். கண்டல் தாவரம் பாதுகாக்கப்பட்டது. அதனை வெட்ட கூடாது. ஆனால் அதை வெட்டிக் கொண்டு போகிறார்கள். தள்ளாடியிலை வெட்டி மன்னாருக்குள்ளால கொண்டு போகின்றார்கள். ஆற்று முகத்துவாரத்திலை கடற்படையினர் பரிசோதிப்பார்கள். அவருக்கு ரீலோட் கார்ட் ஒன்று கொடுத்தால் அவர் அந்த நேரம் விட்டு விடுவார்.

இப்பொழுது புதிதாக ஒரு நுட்பம் அகலச்சிறகு வலை என்று ஒன்றை பயன்படுத்துகின்றார்கள். கம்புகளுக்குப் பதிலாக அன்ரனா குழாய்கள் போட்டிருக்கிறார்கள். பண்ணைப் பாலத்தால போகும் போது அவற்றைக் காணலாம். பெரிய கம்புக்கு பதிலாக ஒரு வலைக்கு 25 தொடக்கம் 30 அன்ரனா குழாய் கம்பிகளை நடுவாங்கள். அப்படி 100, 200 வலைகள் இருக்கின்றன. அப்படியென்றால் கரைக்கு மீன் எப்படி வரும். மன்னாரிலை நிறைய இடத்தில் இதனால் பிரச்சனை. இரவில் படகு ஓடினால் அந்த கம்பிகளாலை படகு எல்லாம் உடையுது. படுப்பு வலைகளை அந்த இடங்களில் போடேலாது. இப்பிடியான பிரச்சனைகளை சொன்னால் தீர்ப்பதற்கு ஒருவரும் இல்லை.

உற்பத்தி அளவு என்று பார்த்தால் எங்களுடைய பதிவின் படி அரசாங்கப் புள்ளிவிபரம் எல்லாம் பிழை. அவர்கள் கூட்டி காட்டுகின்றார்கள். புள்ளிகள் அப்படி இல்லை. எங்களுடைய ஊரில் கிட்டத்தட்ட 350 வள்ளம் நிற்கின்றது. கடலுக்கு போவது 10, 15 வள்ளம் தான். ஏனென்றால் அந்தளவிற்கு மீன் இல்லை. கறிக்கே மீன் இல்லை. மீனவர்கள் வள்ளத்தை இழுத்து வைத்திட்டு நிறையப் பேர் முல்லைத்தீவிலை கூலிக்கு அட்டை பிடிக்கிறதற்கு நிற்கிறார்கள். இதாலை அங்கே பிரச்சனை. எல்லோரையும் போகச்சொல்லி அவர்கள் துரத்துகிறார்கள். அங்கே அடிபாட்டில் காயங்கள் ஏற்பட்டுமிருக்கிறது.

கிழக்கு கரையோரப்பகுதிகளில் ஆட்கள் இல்லாத இடம் இருக்கின்றது. அதில் பருவத்துக்கு ஒரு பொதுவான மீன்பிடி இடத்தை ஒதுக்கி வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களுக்கு ஒரு பருவகாலத்தில் அவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுத்து குறிப்பிட்ட காலம் முடிய அவர்கள் திரும்ப போகக் கூடியவாறு ஏற்பாடு செய்து கொடுத்தால் நல்லது என நாங்கள் கதைத்தோம். அதற்கு ஒருவரும் ஒத்து வரவில்லை. தென்பகுதி மீனவர்கள் வந்து அந்த இடத்தை பிடிப்பார்கள் அந்த நேரம் யோசிப்பீர்கள் என்று சொல்லியிருக்கின்றோம்.

மன்னாரிலை நிறையப் பேருக்கு தொழில் இல்லாமல் சரியான கஸ்டம். அவர்கள் இன்று அனுமதி பெற்ற முதலாளிகளுக்கு கூலிக்கு நின்றுதான் அட்டை பிடிச்சு கொடுக்கிறாங்கள். அவ்வாறு நிறைய பிரச்சினைகள் போகின்றது. அங்கு துறைசார்ந்த கல்வி இல்லை. பாடசாலைகளில் இது சம்பந்தமான பாடமே இல்லை. ஆனால் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மீன்பிடி தொழில் தொடர்பான பாடம் இருக்கின்றது.

நாங்கள் விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் பல்கலைக்கழகத்தில் சொல்லி கடல்வளப்பயிற்சியை தொடங்கி அதில் படித்த மாணவர்களை வடமாகாணத்தில் அதற்கான ஆசிரியர்களாக நியமித்து பாடசாலைகளில் படிப்பித்தோம். நான் பரீட்சை தாள் திருத்த போனனான். கரையோர மாணவர்கள் நல்ல ஆர்வத்தோடு இந்தப் பாடத்தை கற்றிருக்கின்றார்கள்.

இன்று அந்தப் பாடமே இல்லை. படிப்பிற்கப்படுவதுமில்லை. ஆசிரியர்களும் அதற்கென்று இல்லை. அதில் பயிற்சி பெற்றவர்களும் கிடையாது. சரியான நிபுணத்துவ ஆலோசனை இல்லை. பல்கலைக்கழக மட்டத்தில் கூட அது குறைவு தான். கடல் தொழில் பீடம் என்ற ஒன்று வரப்போகின்றது. முல்லைத்தீவிலை அனுமதியெல்லாம் வந்து விட்டது. அதற்கு யார் மாணவர்களாக இருக்கப் போகின்றார்கள் என்றால் சிங்கள மாணவர்களாகத் தான் இருப்பார்கள். ஆங்கில மொழியில்தான் வரப்போகின்றது. எங்களுடைய சனம் கடல்தொழில் இழிவு தொழில், மீன் பிடியா என அதற்கு விண்ணப்பிக்க மாட்டார்கள். சிங்கள மாணவர்கள் விணணப்பிப்பார்கள். அவர்களுக்குத் தான் கிடைக்கும். இது எப்படி இயங்குமென்று எங்களுக்கு தெரியவில்லை. அப்படி ஆளணிகள் என்று சொல்லி எங்களுக்கு கிடையாது. வளத்திற்கு ஆளில்லை, பாதுகாப்பிற்கு இல்லை. அப்படியிருக்கும் போது எப்படி இந்த தொழிலை முன்னெடுத்து செய்கின்றது.

கடல் தொழில் வித்தியாசமானது விவசாயம் போன்றதில்லை. ஆளணிப் பிரச்சனை இருக்கின்றது. அரசாங்க கல்வி இல்லை. அடிக்கடி இடம்பெற்ற இடப்பெயர்வு, இந்திய மீனவர்களின் தொல்லை, எங்களுடைய ஆட்களின் ஒழுக்கயீனம் என பல பிரச்சனைகள். நிர்வாக அதிகாரிகள் ஓரளவுக்கு செயற்படுகின்றார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்றாப்பளை...

கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு சென்றுவிட்டு வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் உள்ள தனது வீடு நோக்கி பயணித்த இளைஞரே மின் கம்பத்துடன் மோதி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த நிரோஜன் என்ற 31 வயதான இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் உடல்கூற்று சோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-30,33,104)

## கஜேந்திரகுமார்...

ருக்கு தற்காலிகமான வெளிநாட்டு பயணங்களுக்கான தடை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இது தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்ததாவது,

கொள்ளுப்பிட்டி பொலிஸார் எனது வீட்டிற்கு வந்து சிங்களத்தில் எழுத்து மூல ஆவணமொன்றை வழங்கினார்கள்.

என்னால் சிங்களத்தில் வாசிக்க முடியாது என்பதால் அதனை நான் ஏற்றுக்கொள்ள மறுத்தேன். அதன் பின்னர் சிங்களத்தில் அதனை வாசித்த அவர்கள் நான் அதற்கு கட்டுப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

நான் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஆஜராகும் வரை நாட்டை விட்டு தடைவிதிக்கக்கோரும் வேண்டுகோளை கிளிநொச்சி நீதவானிடம் பொலிஸார் விடுத்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், நான் பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலத்தை பதிவு செய்யும் வரை வெளிநாட்டிற்கு செல்வதற்கு எனக்கு அனுமதியளிக்க வேண்டாம் என நீதவான் உத்தரவிட்டுள்ளார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (ம-315)

## மனித உரிமைகள்...

வாக்குமூலம் வழங்க பொலிஸாருக்கு அழைப்பாணை ஒன்றை அனுப்பியுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜினால் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமாரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில், சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்று வாக்குமூலம் வழங்குவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-104)

## காணிகளை...

பாதுகாப்பு தரப்பினரையும் பொலிஸாரையும் உள்ளடக்கிய குறித்த குழு குறுகிய காலப் பகுதிக்குள், அதிகபட்சமாக விடுவிக்கக்கூடிய காணிகளை அடையாளப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, வலி.வடக்கு பிரதேசத்தில் கடந்த 2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசுடமையாக்குவது தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6000 ஏக்கர் காணிகளில் சுமார் 3000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பதால் குறித்த வர்த்தமானியை மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், காணி விடுவிப்பு தொடர்பான தெளிவூட்டல்களை மக்களுக்கு வழங்கி, மக்களின் ஒத்துழைப்புடன் காணிகளை விடுவிப்பதற்கு தேவையான காணி அளவீடுகளை மேற்கொள்வதற்கும், இன்னும் நலன்புரி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து மீள் குடியேற்றுவதற்கும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-33)

## இலங்கையை...

என அமெரிக்காவின் ஆசியாவுக்கான பிரதி உதவி திறைசேரி செயலாளரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் ஆசியாவுக்கான பிரதி உதவி திறைசேரி செயலாளர் ரொபேர்ட் கப்ரோத் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்தனர்.

நாட்டில் நிலவும் நிதி நெருக்கடி தொடர்பாக எடுக்கப்படக்கூடிய நிலையான தீர்வுகள் மற்றும் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான சரியான வழி குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கையை கட்டியெழுப்புவதற்குத் தேவையான சர்வதேச ஆதரவைக் கோரிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ள பல்வேறு துறைகளை கட்டியெழுப்புவது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொண்டார். (ம)

## கஜேந்திரகுமாருக்கு...

எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி சிங்கள ராவய அமைப்பினால் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் கடிதம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு நேற்று செவ்வாய்க்கிழமை காலை வந்த அக்மீமன தயாரட்ன தேரர் தலைமையிலான சிங்கள ராவய அமைப்பினர் சபாநாயகரை சந்திக்க முயன்ற போதும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

சபாநாயகருக்கு பதிலாக பாராளுமன்ற உதவி செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன கடிதத்தை பெற்றுக் கொண்டார்.

இதனை தொடர்ந்து இந்த கடிதம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்ற உறுப்பினர் சிறப்புரிமை, அதிகாரத்தை பயன்படுத்தி குழப்பங்களை விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார்.

ஆகவே அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அக்கடிதத்தில் சிங்கள ராவய அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர். (ம)

## எரி...

இலங்கையில் எரிபொருளை விநியோகிக்கும் ஒப்பந்தத்தில் சினோபெக் நிறுவனம் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளது.

மேலும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமெரிக்க மற்றும் அவுஸ்திரேலிய நிறுவனங்களுக்கும் இலங்கையில் எரிபொருளை விநியோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம)

## பெறுமதிசேர்...

தற்போதுள்ள பெறுமதிசேர் வரியை விடுவித்தல் மீண்டும் அடிப்படை விதிமுறைகளுக்கமைய அண்ணளவாக மொத்த தேசிய உற்பத்தியின் 1.2 சதவீதமான வரி வருமானத்தை அதிகரிப்பதற்கு வாய்ப்புண்டு.

அதற்கமைய, கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளுக்கான விடுவிப்புக்களைப்போலவே, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீதான அழுத்தங்களை இலகுபடுத்துகின்ற மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை பாதுகாக்கின்ற விடுவிப்புக்களை தொடர்ந்தும் பேணிக்கொண்டு, பெறுமதிசேர் வரி விடுவிப்புகளிலிருந்து அதிகளவை நீக்குவதற்கும், பெறுமதிசேர் வரியை மீளச் செலுத்துவதற்காக மிகவும் முறை சார்ந்த பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தி, தற்போது நடைமுறையில் உள்ள இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமையை 2024.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பெறுமதிசேர் வரிச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1592
வெற்றி இலக்கங்கள்
மீனம் 0 0 3 7 9 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.06
சீட்டிழுப்பு இலக்கம் - 1167
T 23 60 72 77
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.06
சீட்டிழுப்பு இலக்கம் 3379
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
S 21 32 71 77
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 06/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1485
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
T 23 04 25 65 72

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.06
சீட்டிழுப்பு இலக்கம் 446
வெற்றி இலக்கங்கள்
துலாம் 22 24 33 56 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/06
சீட்டிழுப்பு இலக்கம் 5137
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Z 0 0 8 6 4 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2111 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.06.06 தினம் செவ்வாய்க்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,608,840/-
I 03 40 73 74
DLB www.dlb.lk

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.06
வெற்றி வாரம்: 4272
வர்ணம்: பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 49,084,815.00
வெற்றி இலக்கங்கள்
17 50 61 65 U
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 333
சீட்டிழுப்பு திகதி 2023.06.06
ஊதா
வெற்றி இலக்கங்கள் 09 12 15
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,988,720/-

ராசி
திகதி 2023-06-06
சுப்பர் ஜக்பொட் ரூ. 6,346,603.20
வெற்றி வாரம் 3823
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 24 45 46 51 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,428,180/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 03 21 25 63 77
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1287
2023.06.06 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 335,619,617.40
தொலை பேசி 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோட்டிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 1937
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2023.06.06
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 51,282,066/-
வெற்றி இலக்கங்கள்
30 47 69 74 N


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15856)

076 825 7716 (ஆகாஸ்)



DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

A/L 2025

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் :
11.06.2023 காலை 8.00மணி (ஞாயிறு)

அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்
நிர்வாகம் : 077 011 9434 (C-6683)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்பு
காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- பரப்பு ஒன்றின் விலை 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்)

(15857)

076 733 6047
076 755 8606


'ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக'

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 12 . 06 . 1950



ஆண்டவன் அடியில் 05 . 06 . 2023

**திருமதி லோகேஸ்வரி பரராஜசிங்கம்** (யோகம்)

வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் காமாட்சியம்மன் கோவிலடி, நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் 05.06.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தர்மலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் கலாபூஷணம் பரராஜசிங்கத்தின் (சமாதான நீதவான், ஸ்ரீ அம்பாள் ரேட்ஸ், அம்பாள் ஹாட்வெயர்ஸ், நீர்வேலி முன்னாள் உரிமையாளர்) பிரிய பத்தினியும் தர்ம குமாரன் (போதனாசிரியர் - தொழில்நுட்பக் கல்லூரி, மன்னார்), தர்மசங்கரன் (யாழ்ப்பாணம் மாநகர சபை), தர்மரூபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீபிரியா (நல்லூர் பிரதேச சபை), வாலாம்பிகை (IT Park), சாருஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நேருக்சன், சிஜிசன், வைஷ்சகி, கேசிகன், பராபரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் செல்வரட்ணம், அமரர் கமலேஸ்வரி மற்றும் முத்துலிங்கம், மகேஸ்வரி (கனடா), அமரர் கமலாதேவி, அமரர் பத்மநாதன், உருக்குமணி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2023) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு.
021 205 4822, 077 706 0502 (15871)

தகவல்:-
குடும்பத்தினர்


NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA.

நேரடி வகுப்புக்கள்

2025 A/L
கணித, உயிரியல் பிரிவுகள்

தமிழ் மொழி மூலம்

PHYSICS
திரு. G. பிரபா
திரு. N. கபிலன்
திரு. R. ராகுலன்

CHEMISTRY
திரு. G. BENO
திரு. T. சுசாந்தன்
திரு. V.K நந்தா

BIOLOGY
திரு. V.S. குணசீலன்
திரு. K. இராகவன்

COM. MATHS
திரு. P. செந்தில்நாதன்
திரு. S. சிவகரன்

AGRICULTURE
திரு. K. அரசிளங்குமரன்

ICT
திரு. K. கேதீஸ்வரன்

ENGLISH MEDIUM

PHYSICS
MR. M. KUGANESWARAN
MR.R.RAAKULAN

CHEMISTRY
MR. G. BENO

BIOLOGY
MR. V.S. GUNASEELAN

COM. MATHS
MR. P. SENTHILNATHAN
MR. S. SIVAKARAN

ஆரம்பம் - 10.06.2023 Saturday 8.00AM
நிகழ்நிலை வகுப்புகளும் நடைபெறும்.
சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு : 076 569 3006, 076 566 3006, 077 791 7611
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
https://facebook.com/NEW SCIENCE HALL JAFFNA
(C-6683)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.